**OS No.329/2024**

**PW– 1–மகேஷ்பாபு**

**த/பெ.**

**நாள். 09.03.2026**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.நான் ரமணா ஆட்டோ பைனான்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த நிறுவனம் என் அப்பாவால் ஆரம்பிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லி இருப்பது நிறுவனத்தின் பெயரில்லா அல்லது தனிப்பட்ட முறையில் என்று கேட்டால் தனிப்பட்ட முறையில் தான் கொடுத்து இருக்கிறேன்.

2. நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தொகையை என்னுடைய வருமான வரி கணக்கில் காட்டி இருக்கிறேன் என்று கேட்டால் இல்லை. இரண்டு லட்சத்திற்கு மேல் பண பரிமாற்றம் செய்யும் போது அதனை வங்கி மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்ற விதிமுறை இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. தாவா பிரமிஸ்ரி நோட்டில் அடித்தல், திருத்தல் காணப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இருக்கிறது. இந்தப் பிரமிஸ்ரி நோட்டு உள்ள சுருக்கு ஒப்பம் முதல் பிரதிவாதியின் உடையது. தாவா பிரமிஸ்ரி நோட் ஆனது என்னால் தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல அதனால் தான் அதில் ஒரே ஒரு சுருக்கு ஒப்பம் காணப்படுகிறது என்றும் சொன்னால் சரியல்ல.

4.நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில்எங்கு வைத்து பிரதிவாதிக்கு தொகை கொடுத்தோம் என்ற விவரம் எல்லாம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடன் யார் யார் வந்திருந்தார்கள் என்று கேட்டால் கணவன் மற்றும் மனைவி என்று இருவரும் வந்திருந்தார்கள். அவர்களைத் தவிர வேறு யார் வந்திருந்தார்கள் என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை.

5. என் தகப்பனாருக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்கனவே வரவு செலவு இருந்து வந்தது என்று சொன்னால் ஆமாம். அந்த வரவு செலவினை அவர்கள் முடித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் என் தகப்பனாருக்கும் இடையே இருந்த வரவு செலவு ஏற்கனவே முடிந்துவிட்டது என்றும் அந்த வரவு செலவு என் போது கொடுத்த பிராமசரி நோட்டு தான் இந்த தாவாவின் பிராமிசரி நோட் என்று சொன்னால் சரியல்ல. அதனை நான் என் அப்பா இறந்த பின்பு எடுத்து இந்த வழக்கிற்க்காக பூர்த்தி செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. எங்கள் நிறுவனத்தின் பதிவு சான்றிதழ் நீதிமன்றத்தில் ஆவண படுத்தவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வசம் ஏற்கனவே சில சொத்துக்கள் இருந்தது என்றும் அவற்றை நான் வாங்க முயற்சி செய்து வந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு சொத்தை கிரையம் கொடுக்க முன்வராததால் தான் என் அப்பாவிற்கு கொடுத்திருந்த பிராமிஸ்ரி நோட்டை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7.பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 2022 ஆம் ஆண்டு விற்று விற்றார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எங்களிடமிருந்து எந்த தொகையும் கடனாக பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.09 19:33:03 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.